# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

ஸ்ரீமத் பாகவதம், 5ம் ஸ்கந்தம் 19ம் அத்யாயம், 21ம் சுலோகம் தேவர்களுடைய கூற்றாக அமைந்திருக்கிறது. தேவர்கள் கூறுகிறார்கள். "இந்தியாவில் பிறப்பதற்கு மனிதர்கள் என்ன தவம் செய்தார்களோ? அல்லது ஸ்ரீமந் நாராயணன் தன் காரணமில்லாக் கருணையினால் இவர்கள் மீது அன்பைப் பொழிந்தாளோ? இந்த பாக்யம் நமக்குக்கூட கிடைக்கவில்லையே!" – அந்த சுலோகம்:

अहो अमीषां किमकारि शोभनं प्रसन्न
एषां स्विदुत स्वयं हरिः।
यैर्जन्म लब्ध नृषु भारताजिरे
मुकुन्दसेवौपयिकं स्पृहा हि नः॥

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு மிக மோசமாக இருக்கிறது. அமெரிக்காவின் டாலர், அரபு நாடுகளின் தினார், இங்கிலாந்தின் ஷில்லிங் இவற்றோடு போட்டி போட இந்திய ரூபாயினால் முடியவில்லை. இந்திய இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் வெளிநாடுகளில் குடியேறிய வண்ணம் இருக்கிறார்கள். தண்ணீர்ப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல் சிக்கல், படிப்பறிவின்மை என, பலப்பல துன்பங்களில் நம்நாடு மூழ்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க தேவர்கள் நம்மை பாக்யசாலிகள் என்று சொல்கிறார்களே! இதை நினைத்து அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. ஆனால் இதற்கொரு காரணம் இருக்க வேண்டும். ஏனென்றால் இதைச் சொல்லுகிற நூல் ஒரு வாரப் பத்திரிகையோ மாதப் பத்திரிகையோ அல்ல. ஸ்ரீமத் பாகவதம்! எழுதியவர் வியாசர்! மஹாபாரதம் எழுதியதால் மன அமைதியை மீண்டும் பெறுவதற்கு உபாயமாக நாரதர் வியாசருக்குச் சொல்லி வியாஸர் எழுதிப் பலன் கண்ட நூல் ஸ்ரீமத் பாகவதம். அந்த நூல் பொய் சொல்லுமா? எனக்குத் தோன்றிய சில விளக்கங்களை உங்கள் முன் வைக்கிறேன். சரியா என்று பாருங்கள்.

உலக நாடுகளின் வரலாறுகளை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கும்போது மற்ற நாடுகளை விட இந்தியா கீழ்க்கண்ட காரணங்களால் வேறுபடுகிறது.

1. கடந்த 10 ஆயிரம் ஆண்டு காலத்தில் இந்தியா வேறு எந்த நாட்டின் மீதும் படையெடுத்து அந்த நாட்டை ஆக்ரமித்ததாகத் தெரியவில்லை. ஆனால் மற்ற நாடுகள் நேர்முகமாக இல்லா விட்டாலும் மறைமுகமாகவாவது மற்றவர்களை அடிமைப்படுத்தும் நோக்கத்தை ஏதாவது ஒரு காலக் கூட்டத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றன.

2. உலக மகாயுத்தங்கள் மற்ற நாடுகளை மையமாக வைத்தே

நடந்திருக்கின்றன. இந்தியாவோ பிரிட்டிஷாரின் கைப் பொம்மையாக மட்டுமே இயங்கி இருக்கிறது.

3. மேல் நாடுகளில் சர்ச் கட்டிடங்கள் கலை அரங்கங்களாகவும் பொதுக் கூடங்களாகவும் விற்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இந்தியாவில் வைதிகக் கோயில்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக் கின்றனவே தவிர குறையவில்லை.

4. எரிமலைகள் இந்தியாவில் இல்லை.

5. பாலைவனப் பிரதேசம் மிகக் குறைவு.

6. காஷ்மீர் தொடங்கி கன்யாகுமரி வரை குறுக்கும் நெடுக்குமாக ஓடும் நதிகள் ஏராளம்.

7. அன்றாடம் காலையில் வீட்டுக் கூரையில் கொட்டிக் கிடக்கும் பனியை வாரி வெளியே போட்டு, நடுங்கும் குளிரில், தலைமுதல் கால்வரை பலவகையான ஆடைகளை சுற்றி அணிந்துகொண்டு வீட்டுக்குள்ளே கூட உஷ்ணத்துக்கு நெருப்பை எரிய வைக்கும் மேல் நாட்டுக் கொடுமைகள் இங்கே இல்லை.

8. உணவுக்கும் குணத்துக்கும் சம்பந்தம் உண்டு என்ற கருத்து தோன்றியதும், பின்பற்றப்படுவதும், இந்தியாவில்தான். அதன் விளைவாக இந்தியன் சாத்வீகக் குணமுள்ளவனாகவும், அறிவாற்றல் உள்ளவனாகவும் இருக்கிறான்.

9. மலைப்பாம்பு முதல் சுவர்ப்பல்லி வரை ஊர்வன, பறப்பன, நடப்பன, மிதப்பன, அனைத்தையும் கொன்று தின்று, மூர்க்கக் குணம் மிகுந்து, கொலை கொள்ளை என்று மற்ற நாடுகள் அவதிப்படும் அவலநிலை இந்தியாவில் இல்லை.

10. ஐயப்பனுக்கு மாலை போடும், கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் குற்றங்கள் மிகக் குறைந்து காணப்படுகின்ற என்று குற்றவியல் துறையும் காவல் துறையும் ஒப்புக் கொண்டிருக்கின்றன. ஆன்மீகமும், சைவ உணவும் மனிதனைப் பண்படுத்து கின்றன என்பதற்கு இது ஒரு அத்தாட்சி. இந்திய சமுதாயத்தைத் தவிர வேறு எந்த சமுதாயத்திலும் இந்த அதிசயத்தைப் பார்க்க முடியாது.

11. இங்கே அசைவம் உண்பவன் கூட புரட்டாசி மாதம் அதைச் சாப்பிடுவதில்லை. மற்ற மாதங்களிலும் வாரம் ஓரிரு நாள் என்று கட்டுப்பாடு வைத்திறான். அதை உண்ணும் போது கூட முக்கிய உணவு அரிசி, பருப்பு, காய்கறி என்று வைத்துக் கொண்டு ஒரு தொடுகறியாகத்தான் அசைவம் உண்கிறான். ஆட்டைத் தோலுரித்து 5 பேர் சுற்றி அமர்ந்து ஆவியில் வெந்த அந்த இறைச்சியை பிய்த்துத் தின்னும் அரேபியப் பழக்கங்கள் இங்கே இல்லை. உணவு சாத்வீகமாய் இருப்பதால் உணர்வுகள் சாத்வீகமாய் இருக்கின்றன. உணர்வுகள் சாந்தமாய் இருப்பதனால் உறவுகள் நீடிக்கின்றன. உடைந்த குடும்பங்களும், முறிந்த உறவுகளும் மற்ற நாடுகளில் இருக்கிற அளவு இங்கே இல்லை.

12. கூட்டுக் குடும்பங்கள் இப்பொழுது குறைந்து கொண்டு வந்தாலும் இந்தியருக்கு குடும்பப் பாசம் அதிகம் என்பதை மற்ற நாடுகளும் ஒத்துக் கொண்டிருக்கின்றன.

13. செத்தாரைப் பிழைக்க வைக்கும் சித்தர்களும், மூவுலகைக் கட்டி வைக்கும் முனிவர்களும், பூகம்பம், புயல், கோள் நிலை திரிதல் முதலியவற்றை முன்கூட்டியே கணித்து பஞ்சாங்கம் எழுதிய பகவத்

ஞானிகளும் இங்கேதான் தோன்றினார்கள். இன்றும் மறைவாக வாழ்கிறார்கள்.

14. வாக்கு சித்தி உள்ளவர்களும், ஞானதிருஷ்டி உள்ளவர்களும் இந்தியாவில் உள்ள அளவு எந்த நாட்டிலும் இல்லை. இந்த நாட்டு ஞானத்தை, மற்றும் சமுதாயக் கட்டுப் பாட்டை ஃபாஹியான் புகழ்ந்திருக்கிறான். யுவான்சுவாங் வியந்திருக்கிறான். அலெக்ஸாண்டர் அதிசயித்து எழுதி இருக்கிறான்.

15. கஜினி முகம்மது 17 முறை கொள்ளையடித்தாலும் குறையாத செல்வம் இந்தியாவின் ஒரே ஒரு ஊரில் மட்டும் இருந்திருக்கிறது!

16. கல்லுக்குள் இருக்கும் தேரையைக் கண்டுபிடித்துச் சொல்லும் மய சாஸ்திரமும், நாடியைப் பிடித்துப்பார்த்து எக்ஸ்ரேயை விட நுட்பமாக வியாதியை எடுத்துச் சொல்லும் வைத்திய சாஸ்திரமும், தொலை நோக்கி இன்றி கிரக நிலைகளைச் சொல்லும், வான சாஸ்திரமும், வரப்போகும் காலத்தில் நடக்கப் போவதைச் சரியாகச் சொல்லும் எதிர்காலப் புராணங்களும் இங்கே அதிகம்.

17. இந்த நாட்டு இசையும் நாட்டியமும், மனத்தைப் பண்படுத்துபவை. உள்ளத்தை ஆனந்தப்படுத்துபவை. பைத்தியக்காரன் கூச்சல் போல் நரம்புத் தளர்ச்சியை உண்டு பண்ணும் மற்ற நாட்டு சங்கீதங்களும், நாட்டியங்களும் நம் நாட்டுக் கலைகள் முன் தலை கவிழ்ந்து நிற்கின்றன.

18. இந்த நாட்டில் அமைதி அதிகம், ஆத்மசாந்தி அதிகம். கூட்டிக்கழித்துப் பார்த்தால் மனிதனுக்கு வேண்டியது இதுதான். இது இங்கே கிடைப்பது போல் வேறு எந்த நாட்டிலும் கிடைப்பதில்லை.

19. உறவுகளின் மேன்மைகளைப் புரிய வைக்கும் நியமஆசாரங்களும், ஒழுக்கத்தின் மேன்மைகளை எடுத்துக்காட்டும் புராண இதிகாசங்களும், இங்கே மக்களின் அன்றாடக் கல்வியாக நடையாடுகின்றன. பெரியவர்களைப் பேர் சொல்லி அழைக்கும் அடங்காப் பிடாரித்தனம் எல்லா நாடுகளிலும் உண்டு. நம் நாட்டில் இல்லை.

நிழல் அருமை வெய்யிலில் தெரியும் என்பார்கள். இந்தியாவின் அருமை மற்ற நாட்டுக்காரர்களுக்குப் புரிகிறது. ஆனால் நம்நாட்டுக்காரர்களுக்கோ அதிகப்பணத்தின் மேல் இருக்கும் ஆசையினால் மற்ற நாடுகளே உயர்வாகக் காட்சியளிக்கின்றன.

"என்மகன் வெளிநாட்டுக் குடிமகனாகவே மாறிவிட்டான்" என்று கூறும்போது ஒவ்வொரு தகப்பன் முகத்தில் தெரியும் பெருமிதத்திலும், மகிழ்ச்சியிலும் எல்லையே இல்லை. ஆனால் பொன்னை விட்டெறிந்து விட்டு, புழுதியை வாரிக்கட்டுவது போல் இவர்கள் செயல். எவ்வளவு பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது. எத்தனையோ ஜென்மங்கள் செய்த புண்ணியத்தினால் இங்கே இந்தியாவில் வந்து பிறக்கிறோம். அதை உதறிவிட்டு மீண்டும் கீழ் நிலைக்குச் செல்ல முயலுவது எத்தனை மடமை. இங்குள்ள புனித நதிகளும், மலைகளும், திவ்ய தேசங்களும் இதை எண்ணி கண்ணீர் வடிக்கின்றனவே இது என்று தான் அந்த வெளி நாட்டு மோகக்காரர்களுக்கு புரியுமோ தெரியவில்லை!